**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

2026-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 -ம் நாள் வெள்ளிக்கிழமை

**<u>O.S. No.12/2025</u>**

வாதி தரப்பு சாட்சியாகிய PW.1ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS)., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், குடவாசல் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அப்துல் சமது | தாலுக்கா | : | குடவாசல் |
| த/க/பெ. | : | முகம்மது யூசுப் | கிராமம் | : | செம்பியன்கூந்தலூர் |
| | | | தொழில் | : | விவசாயி |
| | | | வயது | : | 55 |

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 4ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு குடவாசலில் உறவினர்கள் உள்ளார்களா என்றால் இல்லை. நான் டீக்கடையும் வைத்துள்ளேன். கோவிந்தசாமி மற்றும் அவரது மகன் வெங்கட்ராமணின் எனக்கு எவ்வளவு வருடங்களாக தெரியும் என்றால் சுமார் 1990 வருடத்திலிருந்து தெரியும். நான் கோவிந்தசாமி மற்றும் வெங்கட்ராமணினுக்கு குத்தகை ஏற்பாடு செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். 1வது அயிட்ட 77 செண்ட் வழக்கு சொத்திற்கு வெங்கட்ராமனும், அவரது தகப்பனார் கோவிந்தசாமி உரிமையுடையவர் ஆவார். 2 வது அயிட்ட சொத்தின் விஸ்தீரணம் 1 ஏக்கர் 68 செண்ட் என்றால் சரிதான். 2ம் அயிட்ட சொத்திற்கும் கோவிந்தசாமியும் வெங்கட்ராமனும் உரிமையுடையவர்கள் ஆவார். நான் எத்தனை வருடங்களுக்கு குத்தகைக்கு எடுத்துக்கொண்டேன் என்றால் தற்போது ஞாபகமில்லை. நான் இதற்கு முன்பு குத்தகை அளந்துள்ளேனா என்றால் அளந்துள்ளேன். அதற்கு ரசீது ஏதும் உள்ளதா என்றால் இல்லை. கோவிந்தசாமி மற்றும் வெங்கட்ராமன் நம்பிக்கையுள்ளவர் என்றால் சரிதான். குத்தகை சீட்டு எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் கூந்தலூரில் கோவிந்தசாமி வீட்டில் எழுதப்பட்டது. குத்தகை சீட்டின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. குத்தகை சீட்டு மற்றும் RTR சம்மந்தமான ஆவணங்கள் அனைத்தும் நன்னிலம் நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேன். வா.சா.ஆ.1 உத்தரவு பிறப்பிக்கப்பட்ட போது குடவாசல் எந்த மாவட்டத்தின் கீழ் இருந்தது என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை. அப்போது நாகை காயிதே மில்லத் மாவட்டத்தில் இருந்தது என்றால் சரிதான். திருவாரூர் மாவட்டத்தில் பொருளாதார குற்றப்பிரிவின் கீழ் என்மீது பொய்யான ஆவணங்களை தயாரித்ததாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். என் மீதும் கிராம நிர்வாக அலுவலர்

ஜெயபால் மீதும் வழக்கு தொடுக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள RTR ஆவணங்கள் போலியானது என்றுதான் என் மீது பொளாதார குற்றப்பிரிவின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டு வருவாய் கோட்டாட்சியர் வா.சா.ஆ.1 ஆவணத்தை செல்லாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் அவ்வாறு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை. தாவா சொத்தில் பிரிவு கு.வி.மு.ச.144 ன் கீழ் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் இந்த வழக்கை தவிர வேறு எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வா.சா.ஆ.1 குத்தகை பதிவு உத்தரவு பிறப்பிக்க எப்போது மனு செய்தேன் என்றால் 1991 ல் மனு செய்தேன். நான் மனு கொடுத்து எத்தனை மாதங்களில் என்னை விசாரணை செய்தார் என்றால் அது தற்போது ஞாபகமில்லை. என்னையும் சாட்சிகளையும் தனித்தனியாக தேதிகளில் விசாரித்தார்கள். வெங்கட்ராமனையும், கோவிந்தசாமியையும் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். விசாரித்து முடித்த எத்தனை நாட்களில் உத்தரவு பிறப்பிக்கபட்டது என்றால் அது தற்போது ஞாபகமில்லை. நான் எந்த விசாரணையும் நடக்கவில்லை என்றாலும் கிராம நிர்வாக அலுவலர் ஜெயபாலின் செல்வாக்கை வா.சா.ஆ.1 ஆவணத்திற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல. ஜெயபாலை நீதிமன்றத்தில் விசாரிக்க எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். நான் பொருளாதார குற்றப்பிரிவின் கீழ் போலீசாரிடம் கிராம நிர்வாக அலுவலர் தான் அனைத்திற்கும் காரணம் என்று வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் 1, 2 அயிட்ட சொத்திற்கு வெங்கட்ராமனும் கோவிந்தசாமியும் உரிமையாளர் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். யாருக்கு எவ்வளவு நிலம் சொந்தம் என்று தெரியுமா என்றால் தெரியாது. மொத்தம் 42 களம் அளந்துள்ளேன் என்றால் சரிதான். எத்தனை வருடங்களாக அளந்துள்ளேன் என்றால் சுமார் 10 வருடங்களாக 42 களம் அளந்துள்ளேன். நான் எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. குத்தகை சீட்டு எழுத நான் யாரை சாட்சியாக அழைத்துசென்றேன் என்றால் தற்போது ஞாபகமில்லை. நான் குத்தகை செய்ததற்கான மானியம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு மானியம் பெற்றதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. செய்துள்ளேன். குத்தகை செய்ததற்கான வயலின் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தற்போது ஞாபகமில்லை. இதுவரை நான் சாகுபடியை செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி கோவிந்தசாமியிடமிருந்து வழக்கு சொத்தினை கிரயம் பெற்றார். 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியிடமிருந்து கிரயம் பெற்றார். நான் 1ம் பிரதிவாதியிடம் குத்தகை

சாகுபடி செய்தேனா என்றால் கோவிந்தசாமிக்கு பிறகு 1ம் பிரதிவாதியிடம் தான் சாகுபடி செய்து வந்தேன். வழக்கு தாக்கல் செய்த பிறகு 2 ம் பிரதிவாதி 1 ம் பிரதிவாதியின் நிலத்தை கிரயம் பெற்றார். 2 ம் பிரதிவாதியிடம் நான் சாகுபடி செய்யவில்லை. 2 ம் பிரதிவாதி நாங்கள் ஆட்சேபணையை மீறி நிலத்தை வாங்கியதால் நான் 2ம் பிரதிவாதியிடம் சாகுபடி செய்யவில்லை. 1ம் பிரதிவாதியும், 2 ம் பிரதிவாதியும் நேரடியாக வந்து இடையூறு செய்தார்களா என்றால் இல்லை. 3 ம் பிரதிவாதி மட்டுமே இடையூறு செய்தார். நான் 1, 2, பிரதிவாதிகளை தவறாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் போலியான ஆவணங்களை தயார் செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கேட்கக்கூடிய பரிகாரம் எனக்கு கிடைக்ககூடியது அல்ல என்றாலும் வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2026.01.30 11:15:08 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.